பக்கம்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 16 செவ்வாய்க்கிழமை (30-06-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 215

### தொடர்ந்து 2 ஆம் நாள் உக்கிரச் சண்டை

# கட்டைக்காட்டைச் சூழ அகோர குண்டு வீச்சு!

## படையினர் முன்னேற தொடர்ந்து முயற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 30

கட்டைக்காட்டைச் சூழவுள்ள பகுதிகளிலும் மற்றும் பளை, இயக்கச்சி, கொம்படிப் பகுதிகளிலும் நேற்று இரண்டாவது நாளாக கடும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களும், ஷெல் தாக்குதல்களும் இடம் பெற்றன.

கட்டைக்காட்டில் உள்ள இராணுவ அணிகள் முப்படைகளின் உதவியுடன் முன்னேறுவதற்கு தொடர்ந்து முயன்று வருகின்றன.

அவர்களை வழிமறித்து விடுதலைப் புலிகள் உக்கிரமாக மோதி வருகின்றனர்.

நேற்று அதிகாலை 4 மணி முதல் வான் தாக்குதல்களும் ஷெல் வீச்சுகளும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

ஹெலிகளிலிருந்தும் அவ்வப்போது தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

கட்டைக்காட்டில் நிலைகொண்டுள்ள படையினர் தமது பாதுகாப்புக்காக முன்னரே அமைத்திருந்த மணல் அணைகட்டுகளுக்கு அப்பால் இருந்து மூன்று முனைகளில் தாக்குதல் நடத்தி வருவதாகத் தெரியவருகிறது.

சென்ற ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவ

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மட்டக்களப்பில்

மட்டக்களப்பில் கிரிமிச்சை முகாமில் இருந்து நேற்று முன்தினம் காலை கள்ளியன் தீவு நோக்கி முன்னேறிச் சென்ற படையினரை கள்ளியன் தீவுப்பகுதியில் வைத்து விடுதலைப் புலிகள் இடைமறித்துத் பெரும் தாக்குதலை நடத்தினர்.

இந்த தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத படையினர் இழப்புகளுடன் காடுகளுக்குள் தப்பி ஓடினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதலில் விடுதலைப் புலிகள் போராளியான 2 ஆம் லெப். தங்கேஸ் [ஏரம்பு தேவகுமார் - களுவாஞ்சிக்குடி] வீரமரணமடைந்தார்.

## வெற்றிலைக்கேணியில் 5,400 படையினர்

கடல் மார்க்கமாகத் தரை இறக்கப்பட்ட 5,400 படையினர், தற்பொழுது வெற்றிலைக்கேணிப்பகுதியில் இடம் பெற்று வரும் சண்டையில் ஈடுபட்டுள்ளனர்.

இராணுவப் பேச்சாளர் ஒருவர் இப்படித் தெரிவித்தார் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

மொத்தம் நான்கு படைப் பிரிவுகள் சண்டையில் ஈடுபட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-த)

## முல்லையில் ஊரடங்கு நீக்கம்!

கொழும்பு, ஜூன் 30

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் உடனடியாக நீக்கப்பட்டிருப்பதாக கூட்டுப் படைகள் தலைமை அலுவலகம் நேற்று அறிவித்தது.

எனினும், கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து அமுலில் இருப்பதாக கூட்டுப்படைகள் தலைமை அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. [உ-எ]

## இதயம் நெகிழ்ந்த அஞ்சலி

''ஈழநாதம்'' பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் திரு அழகன் (எஸ். இளங்கோ) அவர்களின் மறைவுக்கு எமது இதயம் நெகிழ்ந்த அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— உதயன் நிர்வாகத்தினரும், ஊழியர்களும்.

## மூவர் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

கட்டைக்காட்டில் நேற்று நடந்த மோதல்களின் போது மூன்று போராளிகள் வீரமரணமடைந்தனர்.

அழகன் (செல்வராஜா இளங்கோ — கல்வயல், மட்டுவில்), சேரன் (சிவஞானம் அன்ரனி ஹில் — கட்டைக்காடு), சிற்றம்பலம் (புவனேஸ்வரன் அஜந்தன் — நெடுந்தீவு) ஆகிய போராளிகளே வீரமரணமடைந்தனர். [உ-3]

## அழகன் வீரமரணம்



பத்திரிகையின் நிர்வாக இயக்குநருமான அழகன் [செல்வ

யாழ்ப்பாணம், ஜூன் 30

விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகரும் ''ஈழநாதம்'' பத்திரிகையின் நிர்வாக இயக்குநருமான அழகன் [செல்வராஜா இளங்கோ] நேற்று கட்டைக்காட்டு களத்தில் வீரமரணம் அடைந்தார் என்ற செய்தியை கவலையுடன் அறியத் தருகிறோம்.

''ஈழநாதம்'' பத்திரிகையை ஆரம்பித்து அதனை வழிநடத்திய துடிப்புமிக்க இளைஞர் அழகன்.

குறுகிய காலத்தில் அவர் பத்திரிகை நிர்வாக அலுவல்களில் தேர்ச்சி பெற்றார். அவர் மறைவு பத்திரிகை உலகிலும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்தியப் படைகளுக்கு எதிரான போரில் — வன்னி மண்ணில் — பல களச்சாதனைகளை புரிந்தவர் அழகன் அவர் யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவார். [உ]

### பத்மநாபா கொலை விவகாரம்:

## இரு இந்திய அதிகாரிகள் கொழும்புக்கு வருகை

ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் பத்மநாபாவும் மற்றும் 13 பேரும் கொலை செய்யப்பட்ட சம்பவம் பற்றி மேலும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக தமிழ்நாடு சிறப்புப் பொலீஸைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகள் கொழும்புக்கு வருகின்றனர்.

நேற்றுக்காலை சென்னையிலிருந்து விமானம் மூலம் அவர்கள் கொழும்புக்குப் புறப்பட்டனர்.

அவர்கள் கொழும்பில் பத்துத் தினங்கள் தங்கியிருந்து இலங்கைப் பொலீஸ் அதிகாரிகளுடன் பேச்சுகள் நடத்துவர்.

அதே விமானத்தில் மத்திய புலனாய்வுத் துறையைச் சேர்ந்த வேறு இரண்டு அதிகாரிகளும் கொழும்புக்குச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ-க]

## சங்கத்தானையில் மாலை குண்டு வீச்சு!

### பாடசாலை சேதம்; ஒருவர் பலி

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் நேற்று மாலை 5.15 மணியளவில் பொம்மர்கள் நடத்திய குண்டு வீச்சில் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் பெரும்பகுதி முற்றாகச் சேதமானது; ஒருவர் உடல்சிதறிப் பலியானார்; ஐந்து வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன; மற்றும் இரண்டு வீடுகள் பலத்த சேதமுற்றன.

முன்னாள் பொலீஸ் உத்தியோகஸ்தரான கந்தையா குமாரசுவாமி (வயது 47) வீட்டில் நித்திரையில் இருந்த சமயம், குண்டு வீச்சுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

சங்கத்தானை கந்தசுவாமி கோயிற் பகுதியிலும் இரு குண்டுகள் வீசப்பட்டன. அவை கோயில் வீதிப் பகுதியில் வீழ்ந்து வெடித்தன. எனினும் பெரும் சேதம் ஏதும் ஏற்படவில்லை. (உ-140)

## ஒரு மாத காலத்தினுள் தெரிவுக் குழுவின் தீர்வு!

கொழும்பு, ஜூன் 30

இனப் பிரச்சினைக்கான தனது தீர்வுத் திட்டத்தை நாடாளுமன்றத் தெரிவுக்குழு அடுத்த ஒரு மாதத்தினுள் சமர்ப்பிக்கும் என்று அறிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் பேச்சாளர் இத்தகவலை வெளியிட்டதாக ''சண்டே ஒப்சேர்வர்'' செய்தி வெளியிட்டிருக்கிறது;

இதேசமயம் —

ஜனாதிபதி செயலகத்தில் இருந்து வந்த யோசனை ஒன்றையும் தெரிவுக்குழு ஆராயும் என்று அப்பேச்சாளர் சொன்னார்.

''பல யோசனைகளில் இருந்து அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு யோசனையை நாம் உருவாக்குவோம்'' — என்றார் அப் பேச்சாளர்.

ஒருமாத காலத்தினுள்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### பல்கலை. அனுமதியில் அநீதியை நீக்கக்கோரி

# பல்லாயிரம் மாணவர்கள் உணர்வுபூர்வமான பேரணி!

யாழ்ப்பாணம், ஜூன் 30

பல்கலைக் கழக அனுமதி விடயத்தில் அநீதியான நடைமுறையைப் பின்பற்ற அரசு முடிவு செய்திருப்பதைக் கண்டித்து நேற்று யாழ். நகரில் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

பாதிக்கப்பட்ட உயர் வகுப்பு மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரிய மாணவர்கள் ஆசிரியர்கள் எனப் பல்லாயிரக் கணக்கானோர் பேரணியில் கலந்துகொண்டனர்.

[illegible] பாதிப்பைப் பிரதிபலிக்கும் வகையில் பேரணியில் மிகவும் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டனர்.

பேரணி ஆரம்பமவதற்கு முன்னர் யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

அக்கூட்டத்தில் மாணவர்

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆள் கடத்தல்:

# 6 தமிழ் இளைஞர் கைது

கொழும்பு, ஜூன் 30

கொழும்பில் ஆட்களைக் கடத்துதல், பயமுறுத்துதல், பணம் பறித்தல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த தமிழ் இளைஞர்களின் குழு ஒன்று பொலீஸாரிடம் சிக்கியது.

கொழும்பு பம்பலப்பிட்டியில் உள்ள வீடொன்றில் பொலீஸ் நிலையப் பாணியில் ஆட்களை இவர்கள் தடுத்து வைத்திருந்த ரகசியமும் அம்பலத்துக்கு வந்துள்ளது.

இந்தக் கும்பலைச் சேர்ந்த 6 தமிழ் இளைஞர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வட்டிக்குப் பணம் கொடுக்கும் வர்த்தகர்கள், வேலைவாய்ப்பு முகவர்கள், புக்கிகள் ஆகியோருக்கு சேர வேண்டிய பணத்தை செலுத்தத் தவறுபவர்களை இந்தக் கும்பல் கடத்திச்சென்று சேர வேண்டிய பணத்தை அறவிட்டுக் கொடுத்து வந்ததாக பொலீஸாருக்குத் தெரிவந்துள்ளது.

## சிதம்பரம் - அண்ணாமலை நகர்

# பொலீஸ் நிலையத்தில் குண்டு வெடித்தது!

சென்னை, ஜூன் 30

சிதம்பரம் — அண்ணாமலை நகர் பொலீஸ் நிலையத்தில் நேற்று அதிகாலை குண்டு ஒன்று வெடித்ததில் நான்கு பொலீஸார் காயமடைந்தனர்.

பொலீஸ் நிலையத்தின் சுற்றுப் புறப்பகுதியில் வெடிக்காத நிலையில் மற்றுமோர் குண்டை பொலீஸார் பின்னர் கண்டுபிடித்தனர். அது செயலிழக்கச் செய்யப்பட்டது.

இதேவேளை —

இப்பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் காவலில் இருந்த போது மரணமானதும், அக்

( 6 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனதா தள் கட்சியில் பிளவு!

புதுடில்லி, ஜூன் 30

ஜனாதிபதித் தேர்தலில் பேராசிரியர் சுவெலுக்கு ஆதரவு அளிப்பது என்ற தீர்மானத்தை ஜனதா தள் எடுத்துள்ளதன் எதிரொலியாக அக்கட்சி பிளவுபடும் அபாயம் ஏற்பட்டுள்ளது

எக்காரணங்கொண்டும் பேராசிரியர் சுவெலுக்கு வாக்களிக்க முடியாதென்று ஜனதா தள் எம். பிக்கள் ஆறு பேர் அந்தக் கட்சியின் தலைமைப் பீடத்துக்கு அறிவித்து விட்டனர்.

கட்சியின் முடிவை மீறி ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தால், கட்சித்தாவல் சட்டத்தின் கீழ் அவர்களின் எம். பி. பதவிகள் பறிபோகும் என்பதால், கட்சித்தாவல் சட்டத்துக்குட்பட்ட முறையில், கட்சியில் பிளவை, ஏற்படுத்தி வெளியேற ஒரு பிரிவினர் திட்டமிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் —

ஜனதா தள் கட்சியில் இருந்து வெளியேறி கர்நாடக மாநிலத்தை மையமாக வைத்து புதிய அரசியல் கட்சி ஒன்றைத் தொடங்கப்போவதாக முன்னாள் முதலமைச்சர் இராமகிருஷ்ண ஹெக்டே அறிவித்திருக்கிறார்.

ஜனதா தள் கட்சியில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி காரணமாக, இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டும் வாய்ப்பு அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[உ-எ]

# கொழும்பு பல்கலை. மாணவி கொலை!

கொழும்பு, ஜூன் 30

கொழும்புப் பல்கலைக்கழக மாணவி ஒருவர் இரத்தினபுரியிலுள்ள அவரது வீட்டில் இருந்து கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

அவரது வீட்டுக்கருகில் உள்ள ஒரு கிணற்றிலிருந்து கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் அவரது சடலம் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

[த]

# உற்சவம்

வடமராட்சி, ஜூன் 30

புலோலி தெற்கு உபய கதிர்காம ஆலய வருடாந்த உற்சவம் நாளை புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 15 ஆம் திகதி தேர் உற்சவமும், மறு நாள் 16 ஆம் திகதி திருவோண நட்சத்திரத்தில் தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

[இ-165]

★ ★ ★

உரும்பராய் ஜூன் 30

உரும்பராய் கற்பகவினாயகர் ஆலயத்தின் மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

[உ-154]

# ஜூலை 31 வரை பரீட்சைக் கட்டணம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

இவ் வருடம் டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஜி.சி.ஈ. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் ஜூலை 31 ஆம் திகதி வரை பரீட்சைக் கட்டணத்தை தபாலகங்களிலும், உபதபாலகங்களிலும் செலுத்தலாம்.

இது சம்பந்தமாக தபால் மா அதிகாரி சகல தபாலகங்கள், உபதபாலகங்களுக்கும் அறிவுறுத்தி உள்ளார். பாடசாலை அதிபர்கள் செலுத்தும் கட்டணங்களை தபாலகங்கள் மட்டுமே பொறுப்பேற்கும்,

[அ]

# கரணவாயில் நினைவஞ்சலி கூட்டம்

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த பின்னர் கடந்த ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் கரவெட்டி வட்டப் பிரதேசத்தில் வீர மரணமடைந்த மாவீரர்களுக்கான நினைவஞ்சலிக் கூட்டம் இன்று 30 ஆம் திகதி கரணவாய் அண்ணா சிலையடி வள்ளுவர் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

(இ-165]

# விசாரணை நடத்தப்படுமாம்

வடக்கு-கிழக்கில் தற்போது நிலவும் சூழ் நிலையை பயன்படுத்தி கொழும்பில் வர்த்தகர்களிடம் பணம் பறிக்கும் குழு பற்றி விசாரணை நடத்த உள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செய [illegible] தெரிவித்தனர். [ச]

---

வண்ணார்பண்ணை - காட்டுத்துறை
அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோவில்

## மகோற்சவ விழா

30-06-92 செவ்வாய்க்கிழமை நடைபெறும் சண்டேஸ்வர உற்சவ விழாவில் அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் அவர்களின் சிறப்புச்சொற்பொழிவு மாலை 4 மணிக்கு நடைபெறும்.

விழா உபயகாரர்

[21580]

---

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்

## வருடாந்த மகோற்சவம்

ஆங்கீரச வருடம் — 1992

30-6-92 பகல் 12 மணிக்கு கொடியேற்றம்
6-7-92 7ஆம் திருவிழா — இரவு கைலைக்காட்சி
9-7-92 10ஆம் திருவிழா — இரவு மஞ்சத் திருவிழா
10-7-92 11ஆம் திருவிழா —
பகல் நாகம் வீதி உலா
இரவு பூந்தண்டிகைக் காட்சி
12-7-92 13ஆம் திருவிழா — இரவு சப்பறத் திருவிழா
13-7-92 14ஆம் திருவிழா —
காலை 5 மணிக்கு தேர்த் திருவிழா
14-7-92 15ஆம் திருவிழா — பகல் தீர்த்தோற்சவம்
இரவு கொடியிறக்கல்
15-7-92 16ஆம் திருவிழா — இரவு தெப்பவிழா

அம்பாளின் விரதம் அனுஷ்டிப்பவர்களின் நலன் கருதி இவ்விளம்பரம் வெளியிடப்படுகிறது

அம்பிகையின் அடியார்கள்:
ஆ. சி. பரமசாமி
இ. லோகநாதன்

[5114]

---

வலி-கிழக்கு தென் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி

## நெல் உடைக்கும் சைனா கொம்பினேசன் அலர் செட் மட்டும் (பெட்டி இல்லாமல்)

எமது சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் அரிசி ஆலையின் பாவிப்பிற்கு நெல் உடைக்கும் சைனா கொம்பினேசன் அலர் செட் [பெட்டி இல்லாமல்] ஒன்று தேவைப்படுகின்றது.

குறித்த சைனா கொம்பினேசன் அலர் வைத்திருப்போர், அதனை விற்க விரும்புவதாயின் அது கொள்வனவு செய்யப்பட்ட காலம், பாவிக்கப்பட்ட காலம் போன்ற விவரங்களுடன் என்ன விலைக்கு அதனை வழங்க முடியும் என்றும் குறிப்பிட்டு 06-07-92க்கு முன் தமது கேள்வி விண்ணப்பங்களை "பொது முகாமையாளர், வலி — கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கம் நீர்வேலி." என்ற விலாசத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

நீர்வேலி.
1992-06-23

பொது முகாமையாளர்

[சி/[illegible]]

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வயிரவநாதர் - சின்னத்தங்கம்

தொல்புரம் கிழக்கைச் சேர்ந்த முன்னாள் பிரபல வியாபாரி காலஞ்சென்ற வயிரவநாதரின் அன்பு மனைவி சின்னத்தங்கம் 29-06-92 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற வியாபாரி நாகலிங்கம் [நாகேசர்] - தங்கம்மா ஆகியோரின் அன்பு மகளும், திருமதி அன்னலட்சுமி - ஏரம்பமூர்த்தி, காலஞ்சென்ற திருமதி சரஸ்வதி - கனகரட்ணம், திருமதி மனோன்மணி - வேலாயுதம் [ஆசிரியர்], காலஞ்சென்ற புத்தக வியாபாரி செல்லத்துரை, காலஞ்சென்ற செல்வி மகேஸ்வரி [முன்னாள் மருத்துவத் தாதி - யாழ். பல்கலைக்கழகம்] ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகேஸ்வரி, கமலாதேவி, தங்கேஸ்வரி [ஆசிரியை], கிருஷ்ணராசா [ஓவசியர், நீர்ப்பாசனத் திணைக்களம், முருங்கன்] ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சரசானந்தராசா [முன்னாள் உபதபால் அதிபர்], சிவநேசன் [ஆதார வைத்தியசாலை, வட்டுக்கோட்டை], நகுலேஸ்வரன் [ஆசிரியர்], நாகேஸ்வரி, நந்தகுமார் [யாழ். பல்கலைக் கழகம்], கலைச்செல்வி [யாழ். பல்கலைக்கழகம்], தவக்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவானந்தன் [யாழ். வளாகம்], சிவலோஜினி [யாழ். வளாகம்], சிவகரன், சிவரஞ்சினி, சிவரூபவ, சிவச்செல்வன், சிவநாதன், சிவதீபன், நிரோஷன், பிரதாப், சதீஸ், சஞ்சீவி, காலஞ்சென்ற ரஜீவ், சுஜீவ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29-6-92 திங்கட்கிழமை வழுக்கையாறு மயானத்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தொல்புரம் - கிழக்கு.
சுழிபுரம்.

தகவல்
வே. சிவநேசன்
[மருமகன்]

[21576]

## P. S. இரட்ணம்

முன்னாள் வியாங்கொட சீப் சைட் பங்காளரும், நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான P. S. இரட்ணம் 28-6-92 அன்று கொழும்பில் காலமானார். இவர் காலஞ்சென்றவர்களான பேதுருப்பிள்ளை - வரோனிக்கா ஆகியோரின் அன்பு மகனும், பேபியின் அன்புக் கணவரும், ஜெயரட்ணம் [ஆஸ்திரேலியா], ஜெயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான லூர்தம்மா, பத்திநாதர், அல்பிறட் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பிறேமினி [ஆஸ்திரேலியா], அன்ரனிராஜன் ஆகியோரின் அன்பு மாமனும், ஆரபி, நிரோ ஆகியோரின் அன்புப் பேரனும், டேவிட், றெஜீனா, அல்பிரட், அஞ்சலா ராஜா, காலஞ்சென்றவர்களான சேவியர், யேசுதாசன், அன்ரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், வீஜினி யோசப், புறுணோ [ஆஸ்திரேலியா], யூஜினி வின்சன்ற், தர்சினி, டெனோ [ஆஸ்திரேலியா] ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும் ஆவார்.

இவரின் நல்லடக்கம் 29-6-92 அன்று கொழும்பில் நடைபெற்றது அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 01-07-92 அன்று 6.00 மணியளவில் புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

16, கோவில் வீதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
அலெக்ஸ் வின்சன்ற்
[மருமகன்]

[21577]

## சண்முகம் கனகலிங்கம் (இராசா)

[C. W. E. கொழும்பு]

திருநெல்வேலியை பிறப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற திரு. திருமதி சண்முகத்தின் மகனும், கமலாதேவியின் அன்புக் கணவனும், காலஞ்சென்ற திருமதி நாகேஸ்வரி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரனும், தெட்சனாமூர்த்தியின் [இளைப்பாறிய P. W. D Overseer] அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற திரு. திருமதி செல்லத்துரையின் மருமகனும், காலஞ்சென்ற பத்மநாதன், அருணாசலம், சரவணமுத்து, ரங்கநாதன், சோமசுந்தரம், கனகசுந்தரம், இராசதுரை, அன்னரட்னம், செல்வரட்ணம், யோகேஸ்வரி, சறோஜினிதேவி, ஜெயதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆகிய சண்முகம் கனகலிங்கம் [27. 6. 92] அன்று கொழும்பில் காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

திருநெல்வேலி வடக்கு.
யாழ்ப்பாணம்.

தகவல்;
செ. தெட்சணாமூர்த்தி
[மைத்துனர்]

[21582]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய சட்ட நிபுணர்கள் குழு இலங்கை வரும் முயற்சி ரத்து!

கொழும்பு, ஜூன் 30

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு பிரபாகரனை நாடு கடத்துவது தொடர்பான நடைமுறைகள் பற்றி இலங்கை அதிகாரிகளுடன் பேச்சுகள் நடத்த கடந்த வாரம் கொழும்பு வருவதாக இருந்த இந்திய சட்ட நிபுணர் குழு இனி வரமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு விஜயம் செய்வதில்லை என்று அக் குழு தீர்மானித்துள்ளதாக இந்தியத் தூதர் நாகேந்திர நாத் ஜா தெரிவித்திருக்கிறார்.

''சண்டே ரைம்ஸ்'' இத் தகவலை வெளியிட்டிருக்கிறது.

இதற்கான காரணம் என்ன என்று செய்தியாளர் கேட்டதற்கு —

''நிச்சயமாக இப்போதைக்கு இந்தியக்குழு வராது. காரணங்கள் எவை என்பதைத் தெரிவிக்க முடியாது.'' — என்று திரு. ஜா பதிலளித்தார்.

கடந்த 20ஆம் திகதி தாம் சென்னை சென்றதற்கும், இந்தியக்குழு இனி வராது என்று எடுக்கப்பட்ட முடிவுக்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்றும் திரு. ஜா தெரிவித்தார்.

இந்தியச் சட்டக்குழு கொழும்பு வருவதற்கு இலங்கை அரசு அனுமதி அளிக்கவில்லை என்பது தெரிந்ததே.

இந்தியக்குழு விஜயம் குறித்து இலங்கை அரசு எடுத்த முடிவு சரியானதே என்று ஜனாதிபதி வழக்கறிஞரும் பிரபல அரசியல்வாதியுமான ஒருவர் தெரிவித்தார்.

''இலங்கையின் நாடு கடத்தல் பற்றிய சட்ட நடைமுறைகள் மற்றும் சட்ட விதிகளை இந்தியத் தூதரகம் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும். அதற்காக இந்தியக்குழு ஒன்று கொழும்பு வரவேண்டியதில்லை. ஆங்கிலச் சட்டம் மற்றும் நடைமுறைகள் பற்றி அறிந்து கொள்ள நாம் பிரிட்டனுக்கு செல்வதில்லையே!'' — என்றும் அவர் கூறினார். (உ-எ)

## இந்திய நிபுணர் குழுவுக்கு அனுமதி மறுப்பு ஏன்?

கொழும்பு, ஜூன் 30

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை நாடு கடத்துவது தொடர்பான சட்ட விதிகளை ஆராய்வதற்காக இலங்கை வர முயற்சித்த இந்தியச் சட்ட நிபுணர் குழுவுக்கு இலங்கை அரசு அனுமதி வழங்க மறுத்தது ஏன்?

இந்தியக் குழு இலங்கை வந்தால் அவர்கள் கொழும்பில் உள்ள சட்ட நிபுணர்கள் மற்றும் அரசு அதிகாரிகளுடன் பேசுவார்கள். அவ்வாறு பேச்சு நடத்துவது பிரபாகரனை நாடு கடத்துவதற்கு இலங்கை அரசு இணங்கியிருப்பதான அர்த்தத்தை ஏற்படுத்தி விடும்.

ஆனால் பிரபாகரனை நாடு கடத்துவது பற்றி அரசு ஏதேனும் முடிவு செய்தால் அது விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு நடத்தக் கூடிய வாய்ப்பையே கெடுத்துவிடும் என்று கருதப்படுகிறது.

ஆகவேதான் இந்த விடயத்தில் அரசு இறுக்கமாக நடந்து கொண்டது

—இவ்வாறு பிரபல அரசியல்வாதியும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான ஒருவரை மேற்கோள்காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டது. (உ-எ)

## குருபூசை

யாழ்ப்பாணம், ஜூன் 30

கந்தர்மடம், ஸ்ரீ சிவகுருநாத குருபீடம் வேதாந்த மடத்தில், ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளின் குருபூசை விழா அண்மையில் நடைபெற்றது.

பண்ணிசைப் பாராயணம் பிரதான நிகழ்ச்சியாக அமைந்திருந்தது. இக் குருபூசை விழாவில் அடியார்கள் பலர் கலந்து சிறப்பித்தனர். (சு)

## ‘குமண’ கப்பல் ஜூலை 7 இல் பருத்தித்துறை வரும்

கொழும்பு, ஜூன் 30

உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு குமண கப்பல் ஜூலை மாதம் 7 ஆம் திகதி பருத்தித்துறை துறைமுகம் வந்து சேரும் என்று அறிவிக்கப்படுகிறது.

இதே வேளை —

உணவுப் பொருள்களை ஏற்றிய படி ‘மெரினான்’ என்ற கப்பல் காங்கேசன்துறை முகத்தில் தரித்து நிற்பதாகவும்—

இது பற்றி யாழ். செயலகத்துக்கு அறிவித்திருந்தும் இறக்கும் வேலைகள் எதுவும் நடைபெறவில்லை என்றும் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இதற்கு மாறாக அந்தக் கப்பலை பருத்தித்துறைக்கு கொண்டு செல்ல ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த)

## தேவாலய பூசை நிறுத்தம்

வடமராட்சி, ஜூன் 30

கரவெட்டி சென். அந்தனிஸ் தேவாலயத்தில் பூசைகள் நிறுத்தப்பட்டு மூடப்பட்டுள்ளது.

பங்குத் தந்தை ஒருவருக்கு உடனடி இடமாற்றம் கிடைத்தமை, அதைத் தொடர்ந்து பங்கு மக்கள் இடமாற்றத்தை தலைமைப் பீடத்திடம் நேரில் ஆட்சேபித்தமை, பங்குத் தந்தை மீதான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்தக் கோரியமை ஆகிய நிகழ்வுகளின் விளைவாகவே தேவாலயம் பூட்டப்பட்டதாக அறிய வந்துள்ளது. (சு-165)

## பௌத்த காங்கிரஸின் தலைமைப் பதவிக்கு லலித்?

கொழும்பு, ஜூன் 30

அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் தலைமைப் பதவிக்கு திரு. லலித் அத்துலத் முதலியை நியமிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இப் பதவிக்கு அரசியல்வாதி ஒருவரை நியமிக்க காங்கிரஸின் சட்ட திட்டங்கள் அனுமதிக்காத போதும் திரு. அத்துலத் முதலியை நியமிக்க ஏதுவாக சட்டத்தைத் திருத்த முயற்சிகள் மேற் கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பௌத்த காங்கிரஸின் மாநாடு ஜூலை 12இல் கூட்டப்பட இருக்கிறது. (க)

## விஞ்ஞான தின விழா

யாழ். இந்துக் கல்லூரியின் விஞ்ஞான மன்றம் நடத்தும் விஞ்ஞான தின விழா இன்று செவ்வாய் காலை 9 மணிக்கு கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும். விழாவில் ‘இந்து விஞ்ஞானி’ நூல் வெளியீடும் இடம் பெறும். யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின், பீடாதிபதி பேராசிரியர் சி. மகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (த)

## துண்டிக்கப்பட்ட நிலையில் தோலில் தொங்கிய கையை மீண்டும் இணைத்த டாக்டர்கள்

கொழும்பு, ஜூன் 30

கொழும்பு வடக்கு ராகம ஆஸ்பத்திரியில், இலங்கையிலேயே முதல் தடவையாக என்று கூறப்படக்கூடிய அதிசய சத்திர சிகிச்சை ஒன்று வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரச தோட்டக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த தோமஸ் டீ சில்வா என்பவரே சத்திர சிகிச்சைக்கு உள்ளானவர்.

அவர் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் வெலிசறையில் வைத்து லொறி ஒன்றுடன் மோதியது

அவரது இடதுகை பெரும்பாலும் துண்டாடப் பட்டு தோலில் தொங்கிய நிலையில் வழிப்போக்கர் ஒருவரால் அவர் ராகம ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

அக் கையை வெட்டி அகற்ற வேண்டும் என்று டாக்டர்கள் கூறினர்.

அத்தருணம் டாக்டர் ரஞ்சித் ஜயசிங்க வார்ட்டுக்குள் வந்தார். தனது உதவி டாக்டர்களுடன் கலந்து ஆலோசனை நடத்திய பின்னர் டரீட்சார்த்த அறுவை சிகிச்சை ஒன்றை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

தியேட்டருக்குள் கொண்டு போகப்பட்ட தோமஸ் டீ சில்வா நீண்ட அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். டாக்டர் ஜயசிங்காவுடன் டாக்டர் ரி. சிவேந்திரனும் அதில் ஈடுபட்டனர்.

தோமஸ் டீ சில்வாவின் கால்களில் இருந்து எடுக்கப்பட்ட தசைநார்களின் உதவியுடன் அவரது கை மீண்டும் பொருத்தப்பட்டது.

அறுவைச் சிகிச்சையில் இது ஓர் அற்புதம் என்று வர்ணிக்கப்பட்டது.

50 வயதான தோமஸ் டீ சில்வா பொருத்தப்பட்ட கையுடன் தேறி வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

## அராலி அகதி முகாம்களை இடம் மாற்ற நடவடிக்கை

அராலி, ஜூன் 30

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினால் அராலியில் அமைக்கப்பட்டுள்ள இடம் பெயர்ந்தோருக்கான அகதி முகாம்களை இடம் மாற்றுவதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

அகதி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள பகுதிகள் அடிக்கடி ஷெல் துப்பாக்கி வேட்டுக்களுக்கு உள்ளாவதே இதற்குக் காரணம் ஆகும்.

இந்த அகதி முகாம்களை துணவி, சங்கானை ஆகிய பகுதிகளுக்கு இடமாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட பகுதிகளில் உள்ள வெற்றுக் காணிகள் பற்றிய விவரங்களைத் தமக்கு அறிவிக்குமாறு வலி - மேற்கு உதவி அரசாங்க அதிபர் செல்வி ரூபினி கனகரத்தினம் கிராம சேவையாளர்களைக் கோரியுள்ளார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினால் அராலியில் அமைக்கப்பட்டுள்ள எட்டு முகாம்களில் மொத்தம் 307 குடும்பங்கள் தங்கி உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-12)

## சார்க் வெளியுறவுச் செயலர்களின் கொழும்பு மாநாட்டில் டிக்ஸிற் பங்குபற்றமாட்டார்

கொழும்பு, ஜூன் 30

கொழும்பில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள தெற்காசிய வெளியுறவுச் செயலாளர்கள் மாநாட்டில் இந்திய வெளியுறவுச் செயலாளர் ஜே. என். டிக்ஸிற் கலந்து கொள்ள மாட்டார்.

வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

அடுத்த மாதம் 8 ஆம் 9 ஆம் திகதிகளில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள சார்க் வெளியுறவு அமைச்சர்களின் மாநாட்டுக்கு முன்னோடியாக ஜூலை 5, 6, 7 ஆம் திகதிகளில் வெளியுறவுச் செயலாளர்கள் மாநாடு நடைபெறும்.

வேறு முக்கிய அலுவல்கள் இருப்பதால் தாம் கலந்து கொள்ள முடியாதிருப்பதாக திரு டிக்ஸிற் அறிவித்திருக்கிறார். அவருக்கு பதிலாக இலங்கைக்கான முன்னாள் இந்தியத்தூதரும், தற்போது புதுடில்லி வெளியுறவு அமைச்சில் பணியாற்றுபவருமான திரு. எல். எல் மல்ஹோத்ரா இம்மாநாட்டில் கலந்து கொள்வார்

ஜூலை 8 இல் ஆரம்பமாகும் வெளியுறவு அமைச்சர் மாநாட்டில் இந்தியாவின் சார்பில் இணை அமைச்சர் எடுவார்டோ பெலேரோ கலந்து கொள்வார்.

ராஜீவ் கொலை விசாரணை தொடர்பாக இந்தியச் சட்டக்குழு இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு கொழும்பு அரசு அனுமதி அளிக்க மறுத்ததற்கும் டிக்ஸிற் கொழும்புக்கும் விஜயம் செய்வதில்லை என்ற முடிவுக்கும் தொடர்பிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது (உ-எ)

## 7 ஆயிரம் படையினர் காயம்!

கொழும்பு, ஜூன் 30

வடக்கு - கிழக்கு யுத்தம் மீண்டும் ஆரம்பமான பின்னர்—கடந்த இரண்டு ஆண்டு காலத்தில்—குறைந்தது 290 அதிகாரிகள் உட்பட சுமார் 7 ஆயிரத்து 200 பாதுகாப்புப்படையினர் காயமடைந்தனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. (உ-எ)

## ஆசிரியர் இடமாற்றம் புதிய நடைமுறை

கொழும்பு, ஜூன் 30

தற்போது நடைமுறையில் உள்ள ஆசிரியர் இடமாற்ற முறையை முடிவுக்குக் கொண்டுவர இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க உள்ளது.

ஆசிரியர் ஒருவர் தான் பதவி ஏற்கும் முதலாவது பாடசாலையிலேயே ஓய்வூதியம் பெறும் வரை தொடர்ந்து சேவையாற்ற சந்தர்ப்பம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

### ஆங்கில வார இதழ் தகவல்:

## புலிகள் நடத்திய தாக்குதல்களில் இரு கடற்படைக் கப்பல்கள் சேதம்

கொழும்பு, ஜூன் 30

கடற்படையின் கரையோரப் பீரங்கித் தாக்குதல்களைச் சீர்குலைப்பதற்காக கடற்படையினரின் படகுகள் மீதான தாக்குதல்களை அதிகரிக்கும்படி கடற்புலிகளுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் உத்தரவிட்டிருக்கிறது.

இப்படி பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ‘சண்டே ரைம்ஸ்’ செய்தி வெளியிட்டிருக்கிறது.

இந்த அச்சுறுத்தலை சமாளிப்பதற்காக கடற்படைத் தலைமைப்பீடம் தனது படையினரை உஷார் நிலையில் வைத்திருக்கிறது என்றும் —

கடற்படையினரின் கப்பல்களைத் தாக்குவதற்கு எப்படியான உத்திகளைக் கையாளும்படி கடற்புலிகளுக்கு அதன் தலைமைப் பீடம் உத்தரவிட்டுள்ளது என்பது தெரியவில்லை என்றும் —

கடந்த காலங்களில் வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட படகுகளைக் கொண்டு வந்து கடற்படைக் கப்பல்களுடன் மோதி கடற்புலிகள் தாக்கினர் என்றும் ‘சண்டே ரைம்ஸ்’ செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரியிலும் மே மாதத்திலும் கடற்புலிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதல்களில், இலங்கைக் கடற்படையின் மூன்று கண்காணிப்புக் கப்பல்களில் ‘எடித்தரா’, ‘அபீதா’ ஆகிய இரண்டு கப்பல்களும் மோசமாகச் சேதமடைந்தன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் கடைப் பிடித்து வந்த மற்றொரு தாக்குதல் உத்தி கடல் கண்ணிகளைப் பயன்படுத்தும் முறையாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அரிசிகிலை ஊறப்போட்டு உடன் மாவாக்கும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பாலசிங்கம் [கண்ணாடி], திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு கோண்டாவில். [21575]

## கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் சிவப்பு, வெள்ளை, கறுப்பு இன பேட்டுக் குஞ்சுகளும், சேவல் குஞ்சுகளும் விநியோகிக்கப்படும். பதிவு செய்க. பேடு விலை 45 ரூபா, சேவல் விலை 20 ரூபா. சிங்கம் வீதி, உடுவில், மகளிர் கல்லூரிக்கு முன், மல்வம் வீதியூடாக, வலது புற சிங்கம் வீதி. [20599]

## மலிவு விற்பனை

பாடசாலை உபகரணங்கள், அப்பியாசக் கொப்பிகள், C. R. கொப்பிகள் மலிவு விலையில் மாணவர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. றோணியோ குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்) [சி/2726]

## தவறிவிட்டது

சரவணை கிழக்கு, வேலணையைச் சேர்ந்த கந்தசாமி சிவநடனதேவியின் 616303335V இலக்க அடையாள அட்டை அரியாலையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அரியாலை கணேசன் தோட்டம் முகாமில் ஒப்படைக்கவும். [21573]

## மணமக்கள் தேவை

20—30 வயது செவ்வாய்க் குற்றமுள்ள மலையகத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியைகளுக்கு மலையகத்தில் கற்பிக்கும் ஆசிரியர்கள், உத்தியோகத்தில் உள்ள மணமக்கள் தேவை. A B C D E இல. 20, கண்டி வீதி. சுண்டிக்குளி. [21563]

## மணமகள் தேவை

I.C.M A. [Fully Qualified] லண்டனில் கணக்காளராக தொழில் புரியும் 30 வயது, திருவாதிரை நட்சத்திரம், லக்கின பாவம் இல்லை, செவ்வாய்க் குற்றமற்றவருக்கு படித்த, அழகிய, உயரம் 5 அடி 3 அங். குறைவில்லாத பெண் தேவை. வெளிநாட்டில் உள்ளவர் விரும்பத்தக்கது. தா. சின்னத்துரை, "வேலாகஸ்தான்", பிரதான வீதி, சுன்னாகம். [21578]

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**SPOKEN ENGLISH**

With GRAMMAR By **BRITTO**

புதிய பிரிவு ஆரம்பம்: 04-07-1992 [8 மணி]

[சி-2730]

## இலவச திருமண சேவை

34 வயது, விசாகம், செவ்வாய் 7, ஜேர்மனியில் தொழில் புரிபவருக்கும், 33 வயது, திருவோணம், செவ்வாய் 12, நெதர்லாந்தில் தொழில் புரிபவருக்கும் மணப் பெண்கள் தேவை. து.விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [5109]

## பரீட்சை A/L - 92

A/L 92 ஆண்டு விஞ்ஞான மாணவர்களுக்கு முன் மாதிரிப் பரீட்சை; விண்ணப்ப முடிவு திகதி 05 07 - 92. மேலும் விவரங்களுக்கு 'A' Level Centre, 1 ஆம், ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-2728)

## கணிதம்

2 ஆம் தவணைப் பரீட்சையில் ஆண்டு 6 முதல் 11 வரை துரித மீட்டல் வினா-விடை மூலம் B. Sc (Cey.) ஆசிரியரால் உயர்ந்த பெறுபேறடையக் கற்பிக்கப்படும். இல. 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. (21547)

## அறிவுக் களஞ்சியம்

இளைஞர்கள், மாணவர்களின் பொது அறிவு, எழுத்தாற்றலை வளர்க்க அறிவுக் களஞ்சியம் - I 1 7-92 வெளிவருகின்றது. இளைஞர்களுக்கான நான்கு போட்டிகளும் உள்ளன. விற்பனையாளர்கள் தேவை. பாடசாலையில் விற்க ஆர்வமுள்ளவர்கள் அதிபரின் அறிமுகக் கடிதத்துடன் தொடர்பு கொள்க. கழிவுண்டு. அறிவுக் களஞ்சியம் [ஆனந்தா புத்தகசாலை], 226, காங்கேசன்துறைச் சாலை யாழ்ப்பாணம். [5107]

## உடுவில் மகளிர் கல்லூரி

(தொடர் கல்வி நிலையம்)

### G. A. Q. விரிவுரைகள்

- ★ யாழ்ப்பாண, பேராதனைப் பல்கலைக்கழகங்களுக்கான 1992/93 கல்வியாண்டுக்குரிய புதிய கலைமுதற் — தேர்வு விரிவுரை வகுப்புகள் 01-07-92 பி. ப. 3 மணிக்கு ஆரம்பமாகும்.
- ★ இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- ★ மாணவர்கள் 30-06-1992க்கு முன்னர் தங்கள் பெயர் விவரங்களைக் கல்லூரி வளாகத்தில் பதிவு செய்து கொள்ளவும்.

பட்டப்படிப்புகள் பிரிவு,
உடுவில் மகளிர் கல்லூரி,
உடுவில், சுன்னாகம்.

[சி/2150]

## எமது கண்ணீர் அஞ்சலி



ஆசிரியை

### திருமதி சந்திரா மயில்வாகனம்

வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் முன்னாள் மாணவியும், ஆசிரியையுமான திருமதி மயில்வாகனத்தின் திடீர் மறைவால் ஆறாத்துயரடைகின்றோம். அவரின் இழப்பு மதிப்பீடு செய்ய முடியாதது.

எமது இதயம் கவர்ந்த, எம்மை வளர்த்த, எமது கல்லூரி வளர்ச்சிக்காக அயராது உழைத்த, அரும்பெரும் ஆசிரியை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புகழுடம்பு என்றும் வாழி!

அதிபர், ஆசிரியர்,
மாணவர், ஊழியர்கள்.

வேம்படி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம். [சி/2729]

# இல்லாத கறுப்புப் பூனையை இருட்டில் தேடும் குருடன்

## தெரிவுக்குழு குறித்து விமர்சனம்

கொழும்பு, ஜூன் 30

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு பற்றி அரசியல் யதார்த்தவாதிகள் கூறுவது என்ன?

இருட்டு அறையில் கறுப்புப் பூனை இல்லை என்பதைத் தெரிந்து கொண்டும் அந்த அறைக்குள் கறுப்புப் பூனையைத் தேடும் குருடனைப் போல நாடாளுமன்றத் தெரிவுக் குழு செயற்படுகிறது.

— இப்படி "சண்டே ஐலண்ட்" ஆசிரியர் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது. [உ-எ]

## இணுவைக் கந்தன்

### தீர்த்தோற்சவம்

மேற்படி இணுவில் கந்தசுவாமி கோவில் தீர்த்தத் திருவிழா இன்று (30 - 06 - 1992) பி. ப. 5-00 மணியளவில் நடைபெறும். மங்கள இசையாக பிரபலதவில், நாதஸ்வர வித்துவான்களின் இசை நிகழ்ச்சிகள் இடம்பெறும். பி. ப. 7-00 மணியளவில் இறைகான இசை நிகழ்ச்சியில் இடம் பெற இருப்பது-

வயலின் சோலோ

| | |
|---|---|
| வயலின் இசை | R. இராதாகிருஷ்ணன் |
| | S. கோபிதாஸ் |
| மிருதங்கம் | K. கண்ணதாசன் |
| தவில் | K. R. புண்ணியமூர்த்தி |

[21579]

## கொக்குவில் - நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபை

### அறிவித்தல்

மேற்படி ஆலய வருடாந்த மஹோற்சவம் 4 - 7 - 1992 சனிக்கிழமை காலை 10-00மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 14 - 07 - 1992 செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவத்துடன் முடிவடைகின்றது.

இத் தினங்களில், 23 - 05 - 1992இல் கூட்டப்பட்ட ஆலய வழிபடுவோர் மகாசபைக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட யாப்பின்படி மகாசபைக்கு அங்கத்தவர்கள் சேர்க்கப்படும். அங்கத்தவராகச் சேர விரும்பும் 21 வயதுக்கு மேற்பட்ட கொக்குவில், கோண்டாவில் அம்பாள் அடியார்கள் ஆலய அன்னதானமடத்திலுள்ள காரியாலயத்தில் பின்வரும் சந்தாப் பணத்தை கட்டி விரும்பிய அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒரு வருட சந்தா:- ரூபா 10/-
ஆயுட்கால சந்தா:- ரூபா 100/-

மேலதிக விவரங்கள் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

க. தர்மலிங்கம்,
செயலாளர்,
ஆலய பரிபாலன சபை

(5113)

உ

## கோப்பாய் ஸ்ரீ வீரபத்திர சுவாமி கோவில் மஹோற்சவ விஞ்ஞாபனம்

மேற்படி உற்சவத்தை முன்னிட்டு 30 - 06 - 92 செவ்வாய்க்கிழமை (இன்று) தொடக்கம் தினமும் மாலை 6 - 45 மணி தொடக்கம் 8 மணிவரை

### கந்தபுராண விரிவுரை

இசைப் பேருரை

நிகழ்த்துபவர்
"சித்தாந்த வித்தகர்", "கலைமாமணி", "விற்கலை விநோதன்"
ஈழநல்லூர்

**எஸ். எஸ். சர்மா**
அவர்கள்

வயலின்: இ. வெங்கடேஸ்வர சர்மா
மிருதங்கம்: இ. பாலச்சந்திரன்

அனைவரும் வருக! அருட்கதை பெறுக!!

ஆலய முகாமையாளரும்,
திருவிழா உபயகாரர்களும்.

(21574)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### நனைத்துச் சுமக்கவா?

வடக்கு - கிழக்கில் நடை பெற்ற விசேட ஜி. சி. ஈ. உயர் தரப் பரீட்சையையும், ஏனைய மாகாணங்களில் நடந்த உயர் தரப் பரீட்சையையும் பல் கலைக்கழக அனுமதிக்குத் தனித்தனியே கணிப்பதென உயர் கல்வி அமைச்சு செய்த முடிவைக் கண்டித்து, குடா நாட்டு மாணவர்கள் உணர்ச்சி மயமான மாபெரும் பேரணி ஒன்றை நேற்று நடத்தினார் கள்.

ஆயிரக்கணக்கான உயர் கல்வி மாணவர்கள் பங்கு பற்றிய பேரணியில், அவர் களை ஆதரித்து பல்கலைக் கழகமாணவர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரிய மாண வர்கள், ஆசிரியர்கள் ஆகி யோரும் சேர்ந்து கொண்ட னர்.

உயர்கல்வி அமைச்சின் முடிவினால் பாதிக்கப்படும் மாணவர்கள் மட்டுமன்றி முழுக் கல்விச் சமுதாயமே சேர்ந்து இந்தப் பேரணியை நடத்தியிருக்கிறது! இது போன்ற ஒற்றுமையும், ஓரணி யில் நிற்கும் இயல்பும் தமி ழர் சம்பந்தப்பட்ட எல்லா விவகாரங்களிலும் உருவாக வேண்டும்.

குடாநாட்டுக் கல்விச் சமூ கத்தின் மனக்கொதிப்பையும், மாணவர்களின் — கட்டிள மைப் பருவத்தினரின் — மன வெதும்புதலையும் நேற்றைய பேரணி மிகத் துல்லியமாக எடுத்துக் காட்டியது.

தமிழ் இளைஞர்களின் சக்தி யின் வீரியத்தை, திண்ம பலத்தை அரசு இதுவரை புரிந்திருக்க வேண்டும். கடந்த இரண்டு வருடங்களாக வடக்கு - கிழக்கில் நடந்து வரும் போரின் பின்னரும் தமிழ் இளைஞர்களின் சக் தியை அரசு குறைத்து மதிப் பிடுமானால் அதற்கான விளைவை அதுவே அறுவடை செய்ய நேரிடும்!

எழுபதுகளின் தொடக்கத் தில் சிறிமா அரசு கொண்டு வந்த தரப்படுத்தல், இன்றைய போராட்ட இயக்கத்துக்கு ஊட்டமளித்து, விரைவில் வளர்த்துவிட்டது என்பதை பிரேமதாசா அரசாங்கம் புரிந்து கொள்கிறதோ என் னவோ......! அதன் விளை வாகவே நாட்டின் தேசிய வரு மானத்தில் 40 சத வீதத்தைச் செலவிட்டு யுத்தம் நடத்த வேண்டிய தேவை உருவாகி யிருக்கிறது என்பதையாவது அது உணர்ந்திருக்கிறதா?

ஏன் தெற்கில் கூட, 1971இல் வெடித்த ஜே. வி. பி. கிளர்ச்சிக் கும், 1988—89களில் தெற்கை கதிகலங்க வைத்த ஜே. வி. பி. வன்செயல்களுக்கும் இளைஞர் மத்தியில் ஏற்பட்ட விரக்தியே காரணம் என்பது அரசுக்குத் தெரியாதா? அதனை ஆராய்ந்த ஆணைக் குழு ஒன்று அரசுக்கு அறிக்கைகூடச் சமர்ப்பித்தி ருந்ததே!

தமிழ் மாணவர்கள் தமது நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டால் அது தம்மை புரட்சிப்பாதைக்கு அழைத்துச் செல்லும் என்று வெளிப்படையாகவே ஜனாதி பதிக்கு அறிவித்திருக்கிறார் கள். அதாவது ஏனைய தமிழ் இளைஞருடன் சேர்ந்து தாங் களும் ஆயுதம் ஏந்துவதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்பதைச் சொல்லாமல் சொல்லியிருக்கிறார்கள்.

இருபது வருடங்களுக்கு முந்திய வினையின் விளை வைத் தாங்கிக் கொள்ள முடி யாமல் திக்குமுக்காடும், மூச் சுத்திணறும் அரசு, தனது இப் போதைய விதைப்பின் அறு வடையையும் நனைத்துச் சுமக்கப் போகிறதா? அல்லது தனது முடிவை மாற்றிக் கொள்ளப் போகிறதா?

---

# நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்படுவது மாணவரை புரட்சிப் பாதைக்கு இட்டுச் செல்லும்

## மாணவர் இணைப்புக் குழு ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஜூன் 30

பல்கலைக்கழக அனுமதி விடயத்தில் அநீதியான நடைமுறையைப் பின்பற்ற ஸ்ரீலங்கா அரசு முடிவு செய்ய விருப்பதைக் கண்டித்து நேற்று யாழ். நகரில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியின் போது அரசாங்க அதி பர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்புவதற்காக கையளிக் கப்பட்ட மகஜரின் முழு விவரம் வருமாறு:-

1990 ஆகஸ்ட் ஜி. சி. ஈ. (உயர்தர) பரீட்சை, வட பகுதியில் நிலவிய சூழ்நிலை களைக் காரணம் காட்டி, வடபகுதியில் மட்டும் நடை பெறாது நாட்டின் மற்றைய பகுதிகளில் நடைபெற்றது தாங்கள் அறிந்ததே.

அத்துடன் அப்பரீட்சைக் குப் பதிலாக விசேட பரீட்சை ஒன்று வடபகுதியில் 1991 ஏப் ரலில் நடத்தப்பட்டதும் தாங் கள் அறிந்ததே.

ஆனால் இப்போது பல் கலைக்கழக அனுமதியின் போது இவ்விரு பரீட்சைகளும் வெவ்வேறு பரீட்சைகளாகக் கருதப்பட்டு, வெட்டுப் புள்ளி களும் வித்தியாசமானவை யாக அமையுமென உயர் கல்வி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். இவ் அறி விப்பானது மாணவர்களி டையே பலத்த ஏமாற்றத் தையும், அரசின் மீது வெறுப் பையும் ஏற்படுத்தியுள்ளது.

வடபகுதி இளைஞர்களின் பிரதான குறிக்கோளாக எப் போதுமே கல்வி இருந்து வந் துள்ளது. இது கடந்த காலங் களில் சகல பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சைப் பெறு பேறுகளினாலும் நிரூபிக்கப் பட்டுள்ளது. வடபகுதி இளை ஞர்கள் அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து ஆயுதப் போராட்டத்தில் குதிப்ப தற்கு மிக முக்கிய காரணி யாக அமைந்தது தரப்படுத் தல் கொள்கை' என்பதைத் தாங்கள் அறிவீர்கள். அதே போன்றதொரு தரப்படுத் தல் கொள்கை இப்போது மீண்டும் அவர்கள் முன் வைக் கப்படுகின்றது. ஏமாற்றத் திற்கும், விரக்தியின் விளிம் பிற்கும் செல்லும் இளைஞர் கள் என்ன செய்வார்கள் என்பது தாங்கள் அறியாத தல்ல.

1991 ஏப்ரலில் விசேட பரீட்சையானது 1990 ஆகஸ்ட் நடைபெற்ற உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகவும், 1991 விசேட பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்குப் போதிய கால அவகாசம் இருந்ததாகவும் காரணம் காட்டி தற்போது இவ்விரு பரீட்சைகளும் வெவ்வேறு பரீட்சைகளாக கருதப்பட வேண்டுமென அறிவிக்கப்பட் டுள்ளது.

உயர்தரப் பரீட்சைகளில் ஒத்த கேள்விகள் வினாத் தாள்களில் இடம் பெறுவது இது முதல் தடவையல்ல. உதாரணமாக,

1. 1990 ஆகஸ்ட் நடை பெற்ற உயர்தரப் பரீட்சை யில் இரசாயனவியல் பாடத் தில் கட்டுரை வினாப் பகுதி யில் இடம் பெற்ற 11(ஏ) வினாவானது 1980 ஆகஸ்ட், 1986 ஆகஸ்ட், 1988 ஆகஸ்ட், வினாத்தாள்களிலும், 5 (சி) வினாவானது 1988 ஆகஸ்ட் டிலும், 10(பி) வினாவானது 1986 ஆகஸ்ட்டிலும் இடம் பெற்றவை ஆகும்.

2. 1991 ஆகஸ்டில் நடை பெற்ற உயர்தரப் பரீட்சை யின் இரசாயன யல் பாடத் தில் வினா 5 [ஏ] ஆனது 1989 ஆகஸ்டிலும் வினா 7 [சி] ஆனது 1989 ஆகஸ்டி லும், வினா 8(சி), 11 [ஏ] என் பன 1988 ஆகஸ்டிலும் வினா 12 [பி] [சி] ஆனது 1991 ஏப் ரல் பரீட்சையிலும் இடம் பெற்றவை ஆகும்.

3. 1990 ஆகஸ்ட் உயர்தரப் பரீட்சையில் தாவரவியல் பாடத்தில் கட்டுரை வினா 4 [1] ஆனது 1986 ஆகஸ்ட் பரீட்சையிலும், வினா 1 ஆனது 1982 ஆகஸ்ட் 1980 ஆகஸ்ட் பரீட்சையிலும் இடம் பெற்றவை ஆகும்.

எனவே, ஒத்த கேள்வி கள் இடம் பெற்றன என்ற காரணம் காட்டி இவ்விரு பரீட்சைகளையும் வேறுபடுத் துவது நியாயமானதல்ல.

மேலும் 1987 டிசம்பரில் நடைபெற வேண்டிய சாதா ரண தரப் பரீட்சை வடபகுதி மாணவர்களுக்கு 6 மாதங்கள் காலதாமதமாகியே நடை பெற்றது. அதன் பிற்பாடு தான் அவர்கள் உயர்தரம் கற்க ஆரம்பித்தார்கள். எனவே, 1991 ஏப்பிரல் விசேட பரீட்சைக்குத் தோற் றியதால் அவர்களுக்கு மேல திக கால அவகாசம் இருந்த தென்ற காரணம் தவறான தாகும்.

**பரீட்சை குழம்ப மாணவர் காரணமா?**

1990 ஆகஸ்ட் பரீட்சை இங்கு குழம்பியதற்கு அப் பாவி மாணவர்கள் எவ்விதத் திலும் காரணமாக அமைய வில்லை. அப்பரீட்சை குழம் புவதை அவர்கள் விரும்பியும் இருக்கவில்லை. உண்மையில் அப் பரீட்சைக்கான ஆயத்தம் உச்ச நிலையில் இருந்த வேளையில் தான் அப்பரீட்சை நடைபெறாமல் போய் விட்டது. அப் பரீட்சை குழம்பிய போது அவர்கள் பலத்த ஏமாற்றம் அடைந் திருந்தார்கள். அவ்வாறிருந் தும், தங்களுக்கான விசேட பரீட்சை நடைபெறுமா? என்ற சந்தேகத்தோடும், எப் போது நடக்கும்? என்ற அங் கலாய்ப்புடனும், யுத்தத்தா லும், பொருளாதாரத் தடை களால் ஏற்பட்ட பாதிப்பு களின் மத்தியிலும் 1991 ஏப் ரலில் நடத்தப்பட்ட விசேட பரீட்சைக்குத் தோற்றினார் கள்.

இப்பரீட்சை நடப்பதற்கு முன்னர் இவ் விசேட பரீட்சை 1990 ஆகஸ்டில் நடைபெற்ற பரீட்சையிலிருந்து வித்தியாச மானதாகக் கருதப்படுமென அவர்களுக்கு அறிவிக்கப்பட வில்லை. ஆனால் திடீரென அவர்களை விரக்தியின் விளிம் பிற்கு இட்டுச் செல்லும் வித மாக, 'இரு பரீட்சைகளும் வெவ்வேறாகக் கருதப்படும், என அறிவிக்கப்படுவது அர சானது திட்டமிட்டு வட பகுதி மாணவர்களின் பல் கலைக்கழக அனுமதியைக் கட்டுப்படுத்துகின்றது என்றே நாம் கருத வேண்டியுள்ளது:

இரு பரீட்சைகளும் வேறு

(6 ஆம் பக்கம் பார்க்க)

---

# கடலில் மற்றுமோர் யுத்தமுனை படிப்படியாகத் திறக்கப்படுகிறது

'சண்டே ஐலண்ட்' இத ழில் 'Tigers roam the Sea' என்ற தலைப்பில் தராகி எழுதிய கட்டுரை யிலிருந்து சில பகுதிகள் இங்கு பிரசுரமாகின்றன.

## புலிகளின் 'கொலின்' கடற்கண்ணிகள் கடற்படைக்கு பெரும் அச்சுறுத்தல்

விடுதலைப் புலிகள் போராளிகளின் தற்கொலைத் தாக்குதல்கள், கடல்கண்ணி கள், கடற்புலிகளின் கொமா ண்டோ அதிரடித் தாக்கு தல்கள் ஆகியன அதிகரித்துள் ளன.

இவற்றினால் விடுதலைப் புலிகள் இலங்கைக் கடற் படைக்கு அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றனர்.

**கடல் கண்ணிகளின் அச்சுறுத்தல்**

விடுதலைப் புலிகள் நடத் தும் கடல் வழித் தாக்குதல் களில் எதிர்காலத்தில் பயங் கர அச்சுறுத்தலாக அமையப் போவது கடல் கண்ணிகளே. இக் கண்ணிகள் பெரும் என் ணிக்கையில் தயாரிக்கப்பட்டு, இராணுவம் தனது முக்கிய வினியோக பாதைகளாக பயன்படுத்தப்படும் கேந்திர கடல் வழிகளில், பெரும் எண்ணிக்கையில் விதைக்கப் படும் போதுதான் இப்பயங் கர அச்சுறுத்தல் கடற் படைக்கு ஏற்படும்.

விடுதலைப் புலிகள் தரை யில் பயன்படுத்தும் ஜொனி கண்ணி வெடி போன்று கட லில் பயன்படுத்தும் கண்ணி ணிக்கு 'கொலின்' என்று பெயர்.

கடல் கண்ணி தயாரிப்பில் விடுதலைப் புலிகளின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு 1989 முதல் ஈடுபட்டு வருகிறது.

எனினும் கடல் புலிகள் என்னும் தனிப்பிரிவு 1984ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப் பட்டுவிட்டது.

விடுதலைப் புலிகளின் ஆராய்ச்சிப் பிரிவு தயாரித்த வற்றில் 'கொலின்' கடல் கண்ணி தான் உச்ச பயன் தருவதாக உள்ளது என்று விடுதலைப் புலிகளின் பிரசுர மான 'களத்தில்' தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடற்பரப்பில் மிதக்கும் கண்ணிகளை பரீட்சித்துப் பார்த்த விடுதலைப் புலி களின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு, கடலின் ஆழத்தில் வெடிக்க வைக்கப் படும் கண்ணி வெடி தான் கூடிய பலன் தரக்கூடியது என்று கண்டுபிடித்துள்ளது.

கடலின் மேற்பரப்பில் இருந்து சில அடிகள் கீழே வைக்கப்படும் கண்ணி வேக மாக வரும் படகினால் ஏற் படுத்தப்படும் நீர் அழுத்தம், எந்தத் திசையில் இருந்து வரு கிறதோ அந்தத் திசையை நோக்கி வெடிக்கிறது. அத னால் படகு கண்ணியில் சிக் குகிறது.

இந்தக் கண்ணியைத் தான் விடுதலைப்புலிகளின் ஆராய்ச் சிப் பிரிவு தற்போது கண்டு பிடித்துள்ளது.

**கொலின்ஸ் நினைவாக**

10 - 07 - 1990 இல் வல் வெட்டித்துறை கடலில் மேற் கொள்ளப்பட்ட கடற் புலி களின் மிகப் பெரிய தற் கொலைத் தாக்குதலில் உயி ரிழந்தவர் மன்னாரைச் சேர்ந்த கப்டன் கொலின்ஸ் அவரின் நினைவாகவே கண்டு பிடிக்கப்பட்ட புதிய கண் ணிக்கு 'கொலின்' என பெய ரிடப்பட்டுள்ளது

இக்கண்ணியை மலிவாக, இலகுவாக உற்பத்தி செய்யக் கூடிய முறை ஒன்று பரீட் சித்து பார்க்கப்படுவதாக விடு தலைப் புலிகளின் பிரசுரம் கூறுகின்றது.

வட பகுதிக் கடலில் இரா ணுவத்தின் பிரதான விநி யோகப் பாதைகளில் இக் கண்ணி வெடிகளை விதைப் பதே விடுதலைப் புலிகளின் நோக்கம்.

**கடல் புலிகள்**

1984 இல் உருவாக்கப்பட்ட கடல் புலிகள் அமைப்பு பின் னர் "விடுதலைப் புலிகளின் கடல் புலிகள்" என்ற பெய ரில் சொந்த இலச்சினையுடன் புனரமைக்கப்பட்டது. அதன் விசேட தளபதியாக சூசை யும், தளபதியாக கங்கை அம ரனும் இதில் உள்ளனர்.

கடற் கண்ணிகளை விதைப் பதிலும் கடலில் கொமாண்டோ அதிரடி தாக் குதல்களை மேற்கொள்வதி லும் விசேட பயிற்சி பெற்ற 300 க்கு அதிகமான விடுத லைப் புலிகள் உள்ளனர்.

பூநகரிக்கு அப்பால் மாந் தீவில் உள்ள இராணுவ நிலை மீது கடல் வழியாகச் சென்று விடுதலைப் புலிகளின் விசேட கடல் கொமாண்டோ முதலாவது தாக்குதலை அண் மையில் நடத்தியது என்று விடுதலைப் புலிகள் இயக்கம் தெரிவித்துள்ளது. அத் தாக்கு தலின் போது ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

**கடலில் புலிகளின் அச்சுறுத்தல்**

கடலில் விடுதலைப் புலி களின் அச்சுறுத்தல் உயிரா

(6 ஆம் பக்கம் பார்க்க)

---

## கண்ணாக நின்றீர் கனிந்து!

அருளிருந்த நெஞ்சும் அறம்மிகுந்த சொல்லும்
தெருள்சிறந்த தெய்வத் திருவும் — உருவாக
உண்மையாய்த் தொண்டாற்றி எம்பணி ஓங்கிடவே
கண்ணாக நின்றீர் கனிந்து.

— பண்டிதர் ம. ந. கடம்பேசுவரன்

(சென் பற்றிக்ஸ் கல்லூரி அதிபரும், சிறந்த சமய சமூக சேவையாளருமான அருட்தந்தை பிரான்சிஸ் யோசப் அடிகளாரின் அறுபதாவது அகவைப் பூர்த்தி தினம் இன்றாகும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுரையில் அ.தி.மு.க. மாநாடு

# "பனர்கள்" சரிந்து விழுந்து ஆறு பேர் உயிரிழப்பு

மதுரை, ஜூன் 30

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பதவி ஏற்ற முதலாவது ஆண்டுக் கொண்டாட்டங்கள் நேற்று முன்தினம் (ஞாயிறு) மதுரையில் ஆரம்பமானபோது —

அங்கே வைக்கப்பட்டிருந்த "கட்அவுட் பனர்கள்" சரிந்து விழுந்ததில் அவற்றின் கீழ் நசுங்குண்டு ஆறு பேர் உயிரிழந்தனர்.

மாநாட்டுக்கு வந்திருந்தவர்களுக்கு 25 லட்சம் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. அப்போது ஏற்பட்ட நெரிசலில் உணவுத்துறை அமைச்சர் திரு. விஸ்வநாதன் விழுந்ததால் அவரது கால் முறிந்தது. உடனே அவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டார்.

இதேவேளை—

அன்றைய விழாவில் முதலமைச்சர் ஜெயலலிதா மதுரை மீனாட்சி அம்மன் போல — அலங்கரிக்கப்பட்ட உயர்ந்த அரியாசனம் ஒன்றில் அமர்ந்திருந்தார்.

குதிரைகள் யானைகள் புடைசூழ நடைபெற்ற ஊர்வலம் இராமநாதபுரம் வீதியைக் கடந்து செல்ல 18 மணி நேரம் சென்றது. (அ-10)

## படுகொலை!

மட்டக்களப்பு மாவட்டத்தில் பதின்மூன்று தமிழர்களை இராணுவம் சுட்டுக்கொன்றது.

செய்தி ஏஜென்ஸி ஒன்று நேற்றிரவு இத்தகவலை வெளியிட்டது. (உ-எ)

---

### பொலீஸ்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைதியின் மனைவியைப் பொலீசார் சிலர் மானபங்கம் செய்தனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டதும் தெரிந்ததே.

இச்செயல்களுக்கு பொறுப்பான பொலீஸார் இன்னும் கைது செய்யப்படவில்லை. அவர்களைக் கைது செய்யக் கோரி அரசியல் கட்சிகள் வற்புறுத்தி வருகின்றன.

---

### கடலில்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பத்தை ஏற்படுத்தக் கூடியது. இதுவே உண்மையான யதார்த்த நிலையாகும்.

தீவின் கடற்கரையோரங்களில் மூன்றில் இரண்டு பங்கு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ளது. வடபகுதியில் உள்ள இராணுவம் தனது விநியோக அலுவல்களை பெரும்பாலும் கடல்வழி மூலமாகவே வைத்துள்ளது.

விடுதலைப் புலிகள் கடல் வழியான தமது தாக்குதல் நடவடிக்கைத் திறனைக் கட்டி எழுப்புவதில் கவனஞ் செலுத்தி வருவது, வடக்கு கரைப்பகுதி மற்றும் கடல் பற்றி விவரமான ஆய்வு ஒன்றுக்கு வழி வகுத்துள்ளது.

வடபகுதிக் கடலிலும் ஏரிகளிலும் இலங்கைக் கடற்படையினரின் நடவடிக்கைகளைப் பாதிக்கும் அம்சங்களான கடல் வழிகள் (Sea Lanes), கரையோரப் புவியியல் நிலைவரம், அலை ஓட்டம் (Tidal Action) போன்றவற்றை ஆராய்வதே இதன் நோக்கமாகும்.

தரை யுத்தத்தில் வீதிகள் அமைப்பது, பாலங்கள் கட்டுவது போன்ற முக்கியமான அம்சங்களாகவே கடலின் ஆழம், அலை ஓட்டம், பருவக்காற்று ஆகியன கடல் யுத்தத்தில் அமைந்துள்ளன.

குடா நாட்டில் தாக்குதலுக்குள்ளாகக்கூடும் எனக் கருதப்படும் கரையோரப் பகுதிகளில் தமது பாதுகாப்பு நிலைகளை விடுதலைப் புலிகள் பலப்படுத்தி வரும் அதே வேளையில்—

மான்னார் தீவுக்கும் யாழ்ப்பாணத்தில் உள்ள தீவுப்பகுதிகளுக்கும் இடையே கடல் புலிகளின் நடவடிக்கைகளை அதிகரிக்கவும் நோக்கம் கொண்டுள்ளனர்.

வடக்குப் பகுதியில் இராணுவத்தின் கடல்வழி நடமாட்டத்தை "கொலின்" கடல் கண்ணிகள் மற்றும் கடல்புலிகளின் தாக்குதல்கள் மூலம் குறைப்பதே விடுதலைப் புலிகளின் எண்ணமாகும்.

ஆகவே 'ஈழம்' யுத்தத்தில் வடபகுதிக் கடலில் இன்னொரு போர்முனை படிப்படியாக திறக்கப்பட்டு வருகிறது—

இப்படி அந்த விமர்சனக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### நியாயமான...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேறு பரீட்சைகளாகக் கருதப்பட்டு தேசிய மட்டத் தகுதி அடிப்படை ஒதுக்கீடாகிய 40 சதவீத இடங்களை ஒவ்வொரு துறையிலும் இரு பரீட்சைகளிலும் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை அடிப்படையில் விகிதாசாரப்படுத்துவது மிகவும் பாரதூரமான ஒரு செயலாகும். இச் செயலினால் வழமையாக ஒவ்வொரு வருடமும் யாழ். மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 50 சதவீதத்தால் குறைவடைகின்றது.

1979 இல் இரு உயர்தரப் பரீட்சைகள் நடத்தப்பட்டு இரு பரீட்சைகளும் ஒன்றாகவே கருதப்பட்டன. 1989 இல் வடபகுதியில் பரீட்சை நடத்தக்கூடிய சூழ்நிலை இருந்தும், நாடு முழுவதுமே பரீட்சை நடத்தப்படவில்லை. எனவே, இவ்வாறான செயல்கள் அரசாங்கமானது திட்டமிட்டே தமிழ் மாணவர்களைப் புறக்கணிக்கிறது என நாம் கருதுகிறோம்.

எனவே நாம் உங்களிடம் கேட்பது இரண்டு விடயங்களைத்தான்:

1. இரு பரீட்சைகளையும் மதிப்பீட்டு நோக்கத்திற்காக ஒரே பரீட்சையாகக் கருதவும்,

அல்லது

2. கடந்த கால சாராசரியிலும் பார்க்க மிக அதிகமாகப் பெறுபேறுகளை யாழ். பரீட்சார்த்திகள் பெற்றிருந்தால், கடந்த 5 ஆண்டுகளில் தேசிய மட்ட தகுதி அடிப்படை ஒதுக்கீட்டில் யாழ். மாணவர்கள் ஒவ்வொருதுறையிலும் பெற்ற சராசரி விகிதாசார இடங்களுக்குச் சமமான விகிதாசார இடங்களை யாழ். மாவட்ட பரீட்சார்த்திகளுக்கு ஒதுக்கவும்.

நாம் சலுகை காட்டும்படி கோரவில்லை. எமது நியாயபூர்வமான உரிமைகளை வழங்கும்படியே கோருகின்றோம். நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டால் அவை மாணவர்களைப் புரட்சிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் என்பதில் ஐயமில்லை. ★

---

# உலகச் செய்திகள்

## அல்ஜீரிய ஜனாதிபதி படுகொலை

அல்ஜியர்ஸ், ஜூன் 30

அல்ஜீரியாவின் ஜனாதிபதி முகமத் பூதியா நேற்று படுகொலை செய்யப்பட்டார்.

தலைநகரில் இருந்து 200 மைல் தூரத்தில் உள்ள ஹனாபா நகருக்குச் சென்ற இடத்தில் ஜனாதிபதி மீது அவருக்குப் பின்புறமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி பூதியாவை யார் கொலை செய்தார்கள் என்பதும், கொலைக்கான காரணமும் உடனடியாகத் தெரிய வரவில்லை. ஆறு மாதங்களுக்கு முன்னரே அவர் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார். (அ-எ)

## காங்கிரஸ் வேட்பாளருக்கு கம்யூனிஸ்ட் ஆதரவு

புதுடில்லி, ஜூன் 30

இந்திய ஜனாதிபதித் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள டாக்டர் சங்கர் தயாள் சர்மாவை ஆதரித்து வாக்களிக்கப் போவதாக இந்திய கம்யூனிஸ்ட்கட்சி அறிவித்துள்ளது.

டாக்டர் சர்மாவுக்கு இந்திய மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சி தனது ஆதரவை ஏற்கனவே அறிவித்து விட்டது.

தேசிய முன்னணியில் இவ்விரு கட்சிகளும் அங்கம் வகிக்கின்றன. முன்னணியில் அங்கம் வகிக்கும் இன்னொரு இடதுசாரிக் கட்சியான புரட்சிகர சோஷலிசக் கட்சி, ஜனாதிபதி தேர்தலில் நடுநிலைமை வகிக்கப் போவதாக ஏற்கனவே அறிவித்து விட்டது. போர்வோட் கட்சி இன்னும் தனது நிலைப்பாட்டை அறிவிக்கவில்லை.

இதே வேளை, தேசிய முன்னணியில் உள்ள பிரதான கட்சியான ஜனதா தள் பேராசிரியர் கவெல்லை ஆதரிக்கப் போவதாக அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

## ஆப்கன் ஆட்சி 10 பேர் கொண்ட ஆட்சிக் குழுவிடம்

காபூல், ஜூன் 30

ஆப்கனிஸ்தானின் தற்காலிக அதிபர் பேராசிரியர் முஜாதிதி ஆட்சிப் பொறுப்பை பத்துப் பேர் கொண்ட ஆட்சிக் குழுவிடம் ஒப்படைத்தார்.

இந்த ஆட்சிக் குழு ஜனாப்-ரபானியின் தலைமையில் இயங்கும்.

பேராசிரியர் முஜாதிதி, இரண்டு மாதங்களுக்கு முன் ஜனாதிபதி நஜிபுல்லா பதவி கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து, தற்காலிக அதிபர் பதவிக்கு அமர்த்தப்பட்டார். (இ-எ)

## லண்டன் மிருகக்காட்சிச்சாலை மூடப்படும் நிலை

லண்டன், ஜூன் 30

லண்டன் மிருகக்காட்சிச் சாலை பெரும் நிதி நெருக்கடியை எதிர் நோக்குவதாகவும் இன்னும் ஆறு மாதங்களுக்கு மேல் அதனைப் பராமரிக்க முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

லண்டன் மிருகக்காட்சிச் சாலை உலகில் மிகப் பெரியது.

உலகில் வேறெங்கும் இல்லாத பல்வேறு இன விலங்குகள் இங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

---

## நினைவுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் சுதர்சனின் 5 ஆம் வருட நினைவினையும், விஞ்ஞான பீட மாணவி நித்திலாவின் 3 ஆம் ஆண்டு நினைவையும் கூட்டாக இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் நினைவஞ்சலிக் கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கிறது.

பல்கலைக் கழக மறுமலர்ச்சிக் கழகமும், மட்டக்களப்பு — அம்பாறை மாவட்ட மாணவர் ஒன்றியமும் இணைந்து நடத்தும் இக் கூட்டத்தில் "மாறும் உலகில் இந்தியாவின் புதிய வெளியுறவுக் கொள்கை" — என்ற தலைப்பில் திரு. மு. திருநாவுக்கரசு உரை நிகழ்த்துவார். (உ-3)

## செயலக பொதிகள் தவறின

யாழ்ப்பாணம், ஜூன் 30

அடையாள அட்டைகள் பெறுவதற்கான பொதுமக்கள் கையளித்த விண்ணப்பப் படிவங்களை கொண்ட ஆறு பொதிகள் நேற்று தவறிவிட்டதாகச் செயலக வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது.

செயலக ஆட்பதிவுத் திணைக்களத்தில் இருந்து கொழும்புத் தலைமையலுவலகத்துக்கு அனுப்புவதற்காக, காலை 10-30 மணியளவில் யாழ். பிரதம தபாலகத்திற்கு பொதிகள் எடுத்துச் செல்லப்பட்டன. அப்போதே யாழ். கண்டி வீதி— பிரதான வீதிச் சந்திக்கு இடையில் சைப்பையுடனான ஆறு பொதிகளும் தவறியதாக நிர்வாக உத்தியோகத்தர் திரு. கே. பீதாம்பரம் தெரிவித்தார். (அ)

---

### பல்லாயிரம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகளும், அதிபர், ஆசிரியர்கள் ஆகியோரது பிரதிநிதிகளும் உரையாற்றினர்.

அதனைத் தொடர்ந்து காலை 10.30 மணியளவில் அங்கிருந்து பேரணி புறப்பட்டது. பாடசாலை மாணவர்கள் பேரணியின் முன்பாக அணிவகுத்துச் சென்றனர். கல்வி அடக்கு முறைக்கு எதிரான கோஷங்களை அவர்கள் எழுப்பினர். அரசின் செயலைக் கண்டிக்கும் வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளும் பேரணியில் கொண்டுசெல்லப்பட்டன.

பலாலி வீதியூடாக பேரணி யாழ். ஆஸ்பத்திரி வீதிக்குச் சென்று அங்கிருந்து கண்டி வீதி வழியாக யாழ். செயலகத்தை அடைந்தது.

மாணவர்களின் கோரிக்கைகள் அடங்கிய மகஜர்கள் அங்கு வைத்துக் கையளிக்கப்பட்டன.

ஜனாதிபதிக்கு விலாசமிடப்பட்ட மகஜரை மாணவர் பிரதிநிதியிடமிருந்து யாழ். அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து பேரணி கச்சேரி நல்லூர் வீதி — றக்கா வீதி வழியாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் அலுவலகத்தைச் சென்றடைந்தது. அங்கு வைத்தும் மகஜரின பிரதி ஒன்று கையளிக்கப்பட்டது.

மாணவர்கள் சார்பில் கையளிக்கப்பட்ட அந்த மகஜரை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். கிளை அதிகாரி திரு. ஜோன் பொவன்ஸா பெற்றுக் கொண்டார்.

பின்னர் பேரணி அங்கிருந்து மீண்டும் யாழ். பல்கலைக் கழகத்துக்குச் சென்று முடிவடைந்து. (உ-3-5-15-30-111-143-162)

---

## விவரம் அனுப்பப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 39

நேற்று நகரில் நடைபெற்ற மாணவர்களின் பேரணியின் முடிவில் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரின் முக்கிய விடயங்களை யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பிவைத்தார்.

யாழ். நகரில் உள்ள ஐ. நா. அகதிகள் தூதரக அலுவலகத்தின் வானொலி மூலம் இச்செய்தி அனுப்பப்பட்டது.

## நயினாதீவு நாகபூஷணி கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவத்தை இம்முறை நடத்துவதற்கு ஏற்பாடாகி உள்ளது. அதன் பொருட்டு குருக்கள் ஒருவர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உதவியுடன் நயினாதீவு சென்றுள்ளார்.

இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் மகோற்சவம் ஆரம்பமாகிறது. எனினும் இங்கிருந்து அடியார்கள் எவரும் செல்வதற்கான வசதி எதுவும் இல்லை. (அ)

## சீ-பிளேன் நோட்டம்

யாழ்ப்பாணம் கரையோரப் பகுதிகளில் நேற்று மாலை 5-30 மணிக்கு சீ - பிளேன் ஒன்று வட்டமிட்டு நோட்டம் பார்த்துச் சென்றது. இதனைத் தொடர்ந்து அப்பகுதிகளின் மேலால் அவ்ரோ விமானம் ஒன்றும் பறந்து சென்றது. (உ-15)

## பதவி ஏற்பு

ரோம், ஜூன் 30

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் இத்தாலியில் அமைக்கப்பட்ட 51 ஆவது அரசாங்கம் நேற்று முன்தினம் பதவி ஏற்றது.

சோஷலிசக் கட்சியின் உப தலைவர் அமசற்றோ தலைமையில் இந்தக் கூட்டணி அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது. (இ-எ)

---

### கட்டைக்காட்டை...

(1 ஆம் பக்கம் தொடர்ச்சி)

டிக்கையின் பின் படையினர் கட்டைக்காட்டில் தம் நிலைகொண்டிருக்கும் பகுதிகளைச் சுற்றி இதுபோன்ற உயரமான அணைக்கட்டுகளை அமைத்திருந்தனர்.

கடும் தாக்குதல்களை நடத்தி அந்த அணைகளைத் தாண்டி முன்னேறவே தற்சமயம் அவர்கள் முயன்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அவர்களை முன்னே நகர விடாது புலிகள் தடுத்து வருவதாகத் தெரிகிறது.

நேற்று முன்தினம் நடைபெற்ற சண்டையில் சுமார் ஐம்பது பேரும், நேற்று ஐம்பது பேருமாக நூறு பேர் வரை படையினரில் உயிரிழந்திருக்கலாம் என மதிப்பிடப்படுகிறது.

கண்ணி வெடிகளில் சிக்கி பல படையினர் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ த-3-5-10-15-117)

---

### ஒருமாத...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வு காணுவது என்பது சில கட்சிகளின் பிடிவாதப் போக்கில்தான் தங்கியுள்ளது என்றும் அவர் சொன்னார்.

இதேசமயம்—

நேற்று முதல் எதிர்வரும் ஜூலை மாதம் 3 ஆம் திகதி வரை தெரிவுக்குழுவின் அமர்வுகள் தொடர்ந்து தினசரி இடம்பெறவிருக்கின்றன. என்பது குறிப்பிடத்தக்கது.

---

மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 30 - 06 - 1992 இல் அச்சிட்டு வெளியிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org